**செய்தி வெளியீடு எண்: 696** **நாள்:22.09.2020**

**<u>வணிகவரி மற்றும் பதிவுத்துறை</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

**2017–2018–**ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) நிலுவைத் தொகையினை வழங்குவது தொடர்பாக அமைச்சர்கள் அடங்கிய குழு கூட்டமானது தலைமைச் செயலகத்தில் இன்று **(22.9.2020)** காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள். முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

**2017–2018–**ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) நிலுவைத் தொகையானது மத்திய அரசால் மாநிலங்களுக்கு இன்னும் பகிர்ந்தளிக்கப்படாமல் உள்ளது. இந்த நிலுவைத் தொகையில் தமிழகத்திற்கு மத்திய அரசால் வழங்கப்பட வேண்டிய ரூ.**4321** கோடியினை விரைந்து வழங்கிட வேண்டுமென மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. D. ஜெயகுமார் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். இந்நேர்வில், **37–**வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, **2017–2018–**ஆம் ஆண்டிற்கு நிலுவையாக உள்ள ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொகையினை பகிர்ந்தளிப்பது தொடர்பான பரிந்துரை வழங்க அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டமானது **18.1.2020** அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, இக்குழுவின் கூட்டம் பீகார் துணை முதலமைச்சர் திரு சுசில் குமார் மோடி அவர்கள் தலைமையில் இன்று **(22.9.2020)** காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இக்குழுவின் உறுப்பினரான மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. D. ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டு தமிழக அரசிற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.**4321** கோடியினை விரைந்து வழங்கிட வேண்டும் என கோரினார்கள்.

மேலும், 2017–2018–ஆம் ஆண்டிற்கு மத்திய அரசால் மாநிலங்களுக்கு வழங்கப்பெற வேண்டிய நிலுவையாக உள்ள IGST தொகையினை எவ்வாறு பங்கீடு செய்ய வேண்டும் என்பது குறித்தும் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இது தொடர்பாக மத்திய அரசு விரைந்து முடிவெடுத்து 2017–2018–ஆம் ஆண்டிற்கு தமிழகத்திற்கு சேரவேண்டிய ரூ.4321 கோடி தொகையை அளித்திட வேண்டுமென மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. D. ஜெயக்குமார் அவர்கள் வலியுறுத்தினார்கள். இந்நேர்வில், இக்குழுவின் பரிந்துரைகள் எதிர்வரும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் விவாதித்து, தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையை விரைந்து வழங்கிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

Dr.பீலா ராஜேஷ்
அரசுச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**